<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்பிரமணி | நாள் | 11.09.2023 |
| தகப்பனார் பெயர் | பழனியப்ப கவுண்டர் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) நான் சிறுவயதிலிருந்தே ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களில் கல் குவாரியில் கல் உடைக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால், சரிதான். நான் அவ்வாறு கல் குவாரி உரிமையாளர்களிடம் கல் உடைப்பதற்கான கூலியையும், முன் தொகை பெற்றுக்கொள்வது வழக்கம் என்றால், சரிதான்.

2) 2ம் பிரதிவாதி என்னைப் போலவே கல் உடைக்கும் தொழில் செய்து வருகிறார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. என் தாயாரும், 1ம் வாதியுமான பெருமாயி என்பவரும் என்னுடன் கல் உடைக்கும் தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான்.

3) மேற்படி கல் உடைக்கும் பணியை நானே செய்து வருகிறேனா அல்லது யாரேனும் மேஸ்திரியின் கீழ் பணியாற்றுகிறேனா என்றால், இல்லை. நேரடியாக நானே செய்து வருகிறேன். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி மாதேஸ் மேஸ்திரியாக உள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

4) கடந்த 20.02.2006ம் தேதியில் என் தாயார் பெருமாயிடமிருந்து, ரூ.11,700/–ஐ கடனாக பெற்றுக்கொண்டு இவ்வழக்கின் பிரதிவாதிகள் இருவரும் என் தாயாரிடம் கடன் பத்திரம் ஒன்றினை எழுதிக்கொடுத்தனர் என்றால், சரியல்ல.

5) தற்போது நாங்கள் எங்கு வசித்து வருகிறோம் என்றால், நானும், பழனிசாமி மற்றும் சேட்டு ஆகியோர்கள் ஆந்திராவிலும், என் தாயார் பெருமாயி சீரங்கனூரிலும் வசித்து வருகிறோம். தற்போது என் தாயார் தனியாக வசித்து வருகிறார் என்றால், சரிதான். நாங்கள் மாதம் ஒரு முறை வந்து எங்கள் தாயாரை பார்த்து விட்டு செல்வோம்.

6) எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், தாவா சொத்து கூட்டுப்பட்டாவில் உள்ளது. மேற்படி சொத்திற்கு தனிப்பட்டா பெற நிலத்தை அளக்க

முயற்சித்த போது பிரதிவாதிகள் அளக்க விடாமல் எங்களை தடுக்கின்றனர். அதனால், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

7) தற்போது இவ்வழக்கில் நான் எனக்காக மட்டும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது அனைத்து வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால், அனைவருக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

8) தற்போது இவ்வழக்கு சொத்தின் கிரய பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால், என் தாயார் பெருமாயியின் பெயரில் உள்ளது. தாவா சொத்து என் தாயார் பெயரில் உள்ள நிலையில், தாவா சொத்திற்குரிய வரி ரசீதுகள் 4ம் வாதி சேட்டு பெயரில் உள்ளது என்றால், சரிதான். ஏன் அவ்வாறு சொத்து ஒருவருடைய பெயரிலும், வரி ரசீது வேறொருவருடைய பெயரிலும் உள்ளது என்றால், மேற்படி தாவா சொத்தின் அடி நிலம் என் தாயார் பெயரில் உள்ளது. அதில் உள்ள வில்லை வீடு என் சகோதரர் சேட்டு கட்டியதால் வரி ரசீதும், மின் கட்டண ரசீதும் சேட்டு பெயரில் உள்ளது.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.